செ.வெ.எண்: 32-2020 நாள்:23.04.2020

**விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் மற்றும் மரக்காணம் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகை பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

இன்று (23.04.2020) விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் மற்றும் மரக்காணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் 370 பேரூராட்சி தூய்மை பணியாளர்கள், 300 ஊராட்சி ஒன்றிய தூய்மை பணியாளர்கள் மற்றும் 27 மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 697 நபர்களுக்கு அன்றாட தேவைகளுக்கான அரிசி, அத்தியாவசிய மளிகை பொருட்கள், காய்கறிகள், குழந்தைகளுக்கு தேவையான தின்பண்டங்கள், பாதுகாப்பு கவசங்களான கையுறை, முககவசம், முழு உடற்பாதுகாப்பு கவசம் உள்ளிட்டவைகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டத்தில் தூய்மை பணிகளில் ஈடுபட்டுவரும் பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் அவர்களுக்கு முகக்கவசம், கையுறை மற்றும் முழுஉடற்பாதுகாப்புகவசம் உள்ளிட்ட பொருட்களை தினந்தோறும் தூய்மை பணிகளை மேற்பார்வையிடுபவர் அவர்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும். மேலும், விழுப்புரம் - பாண்டிச்சேரி எல்லைப்பகுதியான சோதனைச்சாவடிகளில் உள்ள காவல்துறையினர் வெளியிலிருந்து வரும் வாகனங்களுக்கு கிருமி நாசினி தெளித்த பின்னரே உள்ளே அனுமதிக்க வேண்டும் என்றும், தூய்மை பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பிளிச்சிங் பவுடர் உள்ளிட்ட பொருட்களின் இருப்பு மற்றும் தேவைகள் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவித்திட வேண்டும் என்றும், தொடர்ந்து கிராமப்பகுதிகளுக்கு வெளிமாநிலங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களின் தகவல்களை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மேலும் அவர்களுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சல் சம்மந்தமான அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு,ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வினில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்